# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 35/ந/2017

ஆணை எண். 216/2017

நாள் : 29/08/2017

அரிமா தா. சுந்தரவடிவேலன்,
காடம்பாடி, நாகப்பட்டிணம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
நாகப்பட்டிணம் நகராட்சி,
நாகப்பட்டிணம். – எதிர் மனுதாரர்

நாகப்பட்டிணம் மாவட்டம் நாகப்பட்டிணம் நகராட்சி, காடம்பாடி, சாலமன் தோட்டம் முகவரியில் வசிக்கும் அரிமா டாக்டர் தா. சுந்தரவடிவேலன் அவர்களது 26.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு, 28.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 35/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து நாகப்பட்டிணம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின்போது ஆணையர் அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாகப்பட்டிணம் மாவட்டம் நாகப்பட்டிணம் நகராட்சி, காடம்பாடி, சாலமன் தோட்டம் முகவரியில் வசிக்கும் அரிமா டாக்டர் தா. சுந்தரவடிவேலன் என்பவர் நாகப்பட்டிணம் நகராட்சியில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடம் குறித்து கீழ்க்காணும் புகார்களை தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளார் :-

(i) நாகப்பட்டிணம் நகராட்சி, நீலா தெரு, நகர நிலஅளவை எண்.1788–ல் உள்ள கட்டட உரிமையாளர் தரைதளம் மற்றும் முதல் தளம் மட்டும் கட்ட அனுமதி பெற்று, அதற்கு மாறாக நான்கு தளங்களைக் கட்டியது ;

(ii) நாகப்பட்டிணம் நகராட்சி அலுவலர்கள் சிலர் கட்டட உரிமையாளரிடம் பிரதிபலன் பெற்றுக்கொண்டு கூடுதல் தளங்களைக் கட்ட அனுமதித்தது ;

(iii) கட்டப்பட்டக் கட்டடத்தின் முழுமையான பகுதிக்கும் வரி விதிக்கத் தவறியது ;

(iv) அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டுவதை ஆரம்பத்திலேயே தடுக்கத் தவறியது .

2. மேற்குறிப்பிட்ட புகார்கள் குறித்து நாகப்பட்டிணம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. நாகப்பட்டிணம் நகராட்சி, வார்டு எண்.3 பிளாக் எண்.20 நகர அளவை எண்.1788–ல் கட்டடம் கட்ட 14.02.2013 நாளிட்ட கட்டட அனுமதி எண்.21/2013/F1–ல் 1860 சதுர அடி பரப்பளவிலான தரைதளம் மற்றும் முதல் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதென்றும், ஆனால் வரைபடத்திற்கு மாறுதலாகவும் கூடுதலாகவும் தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் முறையே 2250 சதுர அடி அளவுகளிலும் மற்றும் மூன்றாம் தளத்தில் ஏ.சி. சீட் அமைத்தும் கட்டடம் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கூடுதலான பரப்பில் கட்டடம் கட்டியதை ஆட்சேபித்து 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 205 (1) மற்றும் (2) ன் கீழ ஒப்பளிக்கப்பட்ட கட்டட வரைபடத்தின் படி கட்டடத்தை 7 நாட்களுக்குள் திருத்தி அமைக்க வேண்டும் என்று 19.10.2016 நாளிட்ட அறிவிப்பு ஆணையில் தெரிவிக்கப்பட்டது என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்படி கட்டடம் திருத்தி அமைக்கப்படாத நிலையில் 27.02.2011 நாளிட்ட நகராட்சி ஆணையர் அவர்களின் ஆணையில் 19.10.2016 நாளிட்ட அறிவிப்பு ஆணையினை உறுதிபடுத்தி ஆணையிட்டதுடன் உரிய கால அளவுக்குள் மாறுதலாகக் கட்டப்பட்ட கட்டடத்தை அப்புறப்படுத்தத் தவறும் நிலையில், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதுடன், கட்டடத்தை நகராட்சியால் அப்புறப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நாகப்பட்டிணம், குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 28.03.2017 அன்று 2/2017 எண்ணிட்ட குற்றப்பத்திரிக்கையினையும் தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள 5550 சதுர அடிக்கு வரி நிர்ணயம் செய்துள்ளதுடன், மூன்றாம் தள ஏ.சி. சீட் கூரை அமைப்பின் 1850 சதுர அடிக்கு அரையாண்டுக்கு ரூ.8,739/– வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். வணிகப்பயன்பாட்டிலான மேற்படி கட்டடத்திற்கு சொத்துவரி மறு மதிப்பீடு செய்யப்பட்டு 2015–2016 ஆம் அரையாண்டு முதல் அரையாண்டு ஒன்றுக்கு ரூ. 43,692/– வரி வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

3. எதிர்மனுதாரரும், நகராட்சி ஆணையருமான திரு பா. ஜான்சன் அவர்களிடமும் 02.08.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தான் 15.05.2015 முதல் இம்மாநகராட்சியில் ஆணையராகப் பணிபுரிவதாகவும், தனது பணிக்காலத்தில் மேற்படி கட்டடம் கட்டும் பணி நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் தனது அறிக்கையில் தெரிவித்த விவரங்களையும் உறுதி செய்தார். முறையீட்டு மனுதாரருக்கு 02.08.2016 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருகை தருமாறு ஆணையிடப்பட்டது. எனினும், அவர் விசாரணைக்கு வருகை தரவில்லை. அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ள கட்டட உரிமையாளர் திரு கே. முத்துராமலிங்கம் அவர்கள் மீது நாகப்பட்டிணம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சி.ஆர்.எம்.பி. வழக்கு எண்.1411/2017 நிலுவையில் உள்ளது. மேலும், கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டடப் பரப்பிற்கு சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதாகவும் ஆணையர் தெரிவித்துள்ளார். எனவே, இந்நேர்வில் குறித்த கட்டடம் சம்பந்தமாக, நாகப்பட்டிணம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று நாகப்பட்டிணம் நகராட்சி

ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், நகராட்சிப் பகுதிகளில் அனுமதியின்றியும், அனுமதிக்கு மாறாகவும் கட்டப்படும் கட்டடங்களை தொடக்கநிலையிலேயே கண்டறிந்து அவற்றினைத் தடுத்து நிறுத்த கீழ்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கவும் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

31/8/17

பெறுநர்

1. **நகராட்சி ஆணையாளர்,**
   **நாகப்பட்டிணம் நகராட்சி,**
   **நாகப்பட்டிணம்.**

2. **அரிமா டாக்டர் தா. சுந்தரவடிவேலன்,**
   **சாலமன் தோட்டம்,**
   **காடம்பாடி, நாகப்பட்டிணம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**